COS No.20/2025

PW-1 –விஸ்வேஷ்வரன்

த/பெ.

நாள். 09.03.2026

<u>வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை .</u>

1.எங்கள் நிறுவனம் டைஸ் மற்றும் கெமிக்கல்ஸ் விற்பனை நடத்தி வருகிறோம். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கும் இன்வாய்ஸ்கள் அனைத்தும் அக்ருதி ரோட்டரி பிரிண்டிங் மில்ஸ் என்ற நிறுவனத்திற்கு தான் கொடுத்திருக்கிறேன் என்றால் சரிதான். அக்ருதி ரோட்டரி பிரிண்டிங் மில்ஸ் தான் இந்த வழக்கின் முதல் பிரதிவாதி என்று சொன்னால் ஆமாம்.

2. முதல் பிரதிவாதி நிறுவனத்திற்கு பிரிண்டிங் செய்ய டையிங் கொடுக்கும்போது நிறுவனத்தின் பங்குதாரர்கள் நான்கு பேர் என்று எனக்கு தெரியும். இந்த வழக்கினை 7 லட்சத்து 80 ஆயிரத்து 893 ரூபாய்க்காக தாக்கல் செய்திருக்கிறேன். முதல் பிரதிவாதி நிறுவனம் சார்பாக 2 லட்சம் ரூபாயை நான் கேட்டிருக்கும் தொகையிலிருந்து பெற்றுக் கொண்டேனா என்று கேட்டால் இல்லை. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. ஏற்கனவே நான் 2 லட்சம் தொகையை பெற்றுக் கொண்டிருந்த போதிலும் அவற்றை கழிக்காமல் இந்த நீதிமன்றத்தில் வழக்காடுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. தவறான இன்வாய்ஸ்களை உருவாக்கி இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதி நிறுவனத்திற்கு எங்கள் நிறுவனத்தின் தான் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல. அதற்குண்டான டெபிட் அட்வைஸை கொடுத்து இருக்கிறார்கள் என்றும் ஆனால் நான் தான் அதனை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

4.**வா.சா.ஆ–5 மற்றும் 6** ஆவணங்கள் இந்த வழக்கத்திற்கு சம்பந்தப்படாதவை என்று சொன்னால் சரியல்ல. முதல் பிரதிவாதி நிறுவனத்தின் சொத்துக்கள் சுமார் ஐந்து கோடிக்கு மேல் மதிப்பிடக் கூடியவை என்றும் சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் நிறுவனத்தின் சொத்துக்களை மட்டுமே பற்றுகை செய்ய முடியும் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ள தக்கவை அல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணங்களின் அடிப்படையில் நான் கோரி இருக்கும் பரிகாரம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

5.வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரி அல்ல நான் தாக்கல் செய்திருக்கும் ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya.

Digitally signed by Dr.V.Sree Vidya.
DN: cn=Dr.V.Sree Vidya., ou=Judicial Department, o=Judicial Officer, l=Tiruppur, st=Tamil Nadu, c=+91
Date: 2026.03.09 19:30:21 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.